## சென்னை விமான நிலையத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## அமைச்சர்கள் - கழக முன்னணியினர் - கழகத் தோழர்கள் திரண்டனர்!















## ஒரு காலப் பெட்டகம்




**நூ**ற்றாண்டு விழா கண்ட தலைவர்களுக்கு மலர் வெளியிடுவது அந்த விழாவை அர்த்தமுள்ளதாக ஆக்கும்.

அந்தத் தலைவரின் புகழையும் பெருமையையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்தவும் தலைவர்களுக்கு அர்த்தமுள்ளதாக விழா மலர்கள் உதவும்.

தமிழ்நாட்டை ஐந்து முறை ஆட்சி செய்தவரும், சட்டமன்ற உறுப்பினராக வைர விழா கண்டவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக 49 ஆண்டுகள் இருந்தவருமான கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி வெளியாகியுள்ள '**தமிழினத் தலைவர் "கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் 2024"** ஒரு காலப் பெட்டகமாக உள்ளது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா தொடங்கி அமைச்சர் உதயநிதி வரை அவர்களுடைய பார்வையில் கலைஞர் பற்றி எழுதிய கட்டுரைகள் மலரில் இடம்பெற்றுள்ளன.

அரசியல் கட்சித் தலைவர்கள், கலையுலகினர், பத்திரிகையாளர்கள், கவிஞர்கள், கல்வியாளர்கள், உடன்பிறப்புகள், இளைஞர்கள் பார்வையில் எழுதப்பட்ட கலைஞர் பற்றிய 112 கட்டுரைகள் விரிவாக இடம் பெற்றுள்ளன.

கலைஞர்பற்றிநெகிழ்ச்சியானநிகழ்வுகள், அரிய தகவல்கள், தமிழ்நாட்டுக்கு ஆற்றிய தொண்டுகள், முதல்வராக அவர் சாதித்த சாதனைகளைப் பலரும் எழுத்தோவியமாகத் தீட்டியிருக்கிறார்கள்.

மலரின் இடையே இடம்பெற்றுள்ள அந்தக் கால கறுப்பு வெள்ளை, இந்தக் கால வண்ண ஒளிப்படங்களும் மலருக்குச் சுவையைக் கூட்டுகின்றன.

**மிது கார்த்தி**

- நன்றி

**'இந்து தமிழ்திசை'**

**14.9.2024**